THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Wednesday, the 26th March 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (The Hon. Thiru M. A. MANICKAVELU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

Starred Questions.

Central Reserve Police

* 216 *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Police Force has been deployed to protect the Students' Hostels and Central Government Offices in Madras from 31st March 1968; and

(*b*) if so, at whose request the Police Force has come to protect the Students' Hostels and the Central Government Cffices?

மத்திய அரசு போலீஸ் படை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 மார்ச் 31-ஆம் தேதி முதல் மத்திய சர்க்காரின் போலீஸ் படை சென்னையில் உள்ள மாணவர் விடுதிகளையும் மத்திய சர்க்கார் காரியாலயங்களையும் பாதுகாக்க வந்தது எனப்படுவது சரியா ?

(இ) ஆமெனில், யார் கோரிக்கை மீது இப்படை விடுதிகளையும் மத்திய அரசு அலுவலகங்களையும் பாதுகாக்க வந்தது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) தலைவர் அவர்களே, நேபாவில் உள்ள மலபார் சிறப்புக் காவலர் மூன்றும் படையின் மூன்று பிரிவுகளை விடுவிக்க திருச்சியிலுள்ள மலபார் சிறப்புக் காவலர் முதல் படையில் மூன்று பிரிவுகள் 9—3—1968 அன்று அனுப்பப்பட்டது. மீதமுள்ள காவலர் படையைக் கொண்டு இம் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு பற்றி எழும் நிலைமைகளைச் சமாளிக்க இயலாது என்று எண்ணியதால், 9—3—1968 முதல் மூன்று திங்களுக்கு மத்திய ரிசர்வ் காவல் படையின் மூன்று பிரிவுகளை இந்திய அரசு ஒப்புதலின் பேரில் இந்த அரசு வரவழைத்தது.

இதில் ஒரு பிரிவு சென்னை நகரில் சட்டம் ஒழுங்கு பற்றிய பணிகளுக்காக உற்றுழிப் படையினராக (Standby) வைக்கப்பட்டுள்ளனர். இப் பிரிவை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தவில்லை.

Zoo for Madurai

* 221 *Q.*—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Zoo in Madurai and

(*b*) if o, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Tamil Nadu Elementary School Teachers' Federation, Salem

* 222 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government have examined certain representations made recently by the Salem Branch of the Tamil Nadu Elementary School Teachers' Federation; and

(*b*) the action taken thereon?

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சேலம் கிளை அண்மையில் விடுத்த சில வேண்டுகோள் பற்றி அரசு ஆராய்ந்ததா ?

(இ) அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

(இ) மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட வேண்டுகோள் ஆய்வில் உள்ளது.

R.V.G. High School, Kurichikottai

* 223 *Q.*—THIRU N. R. THIAGARAJAN, THIRU V. ISVARMURTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that certain persons forced their entry into the R.V.G. High School in Kurichikottai of Coimbatore district during October 1968 and attacked several teachers and students and injured them; and

(*b*) if so, the action taken thereon?

குறிஞ்சிக்கோட்டை ஆர். வி. ஜி. உயர்நிலைப் பள்ளி

திரு. என். ஆர். தியாகராஜன், திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம் குறிஞ்சிக்கோட்டை ஆர். வி. ஜி. உயர்நிலைப் பள்ளியில் அத்து மீறி நுழைந்து சில ஆசிரியர்களையும், மாணவர்களையும் 1968 அக்டோபரில் தாக்கி பலரை காயப்படுத்தியது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) குறிப்பிட்ட நிகழ்ச்சி பள்ளிக்கூட அலுவல்களுடன் தொடர்பு இல்லாததால் கல்வித் துறையால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.